1974 ஏப்ரல் 2]

திரு. ஏ. சி. நரசிம்மன்: தலைவர் அவர்களே, இங்கே பாயின்ட் ஆப் ஆர்டரை முதலாவதாக எழுப்பியவர் வீராசாமி அவர்கள். ஆனால் அதன் பேரில் அத்தனை கட்சிக்காரர்களும் அவரவர்களுடைய அபிப்பிராயங்களைக் கூறுகிறார்கள். பாயின்ட் ஆப் ஆர்டருக்கு தீர்ப்புக் கொடுக்கவேண்டியது தலைவர் அவர்கள். அப்படி ஒவ்வொரு கட்சியினரும் அவரவர்களுடைய அபிப்பிராயங்களைச் சொல்வதற்காக ஒவ்வொரு முறையும் ஒரு பாயின்ட் ஆப் ஆர்டர் என்று சொல்லி தங்களுடைய கருத்துக்களைக் கூறுவது முறைதானா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்படி பாயின்ட் ஆப் ஆர்டர்களை எழுப்புவதிலிருந்து மாண்புமிகு உறுப்பினர்கள் துணைக் கேள்விகள் கேட்பதில் எவ்வளவு ஆர்வம் காட்டுகிறார்கள் என்பது தெரியவருகிறது. இந்த அவையிலே எந்த அளவுக்கு துணைக் கேள்விகள் கேட்பதற்குச் சந்தர்ப்பம் கொடுக்கப்படுகிறது என்பதற்கு நாளைக்கு வேண்டுமானாலும் ஒரு பட்டியலைக் கொடுக்கிறேன். அதிலிருந்து உறுப்பினர்கள் தெரிந்துகொள்வார்கள்.

3. அவை உரிமைப் பிரச்னை.

கோவையிலுள்ள தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத் துணை வேந்தர் பல்கலைக்கழக ஆட்சிக் குழுவின் கூட்டத்தைச் சட்டப் பேரவை நடக்கும் நாளில் கூட்டியது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கோவை செழியன் அவர்கள் ஒரு உரிமைப் பிரச்னையை எழுப்பியிருக்கிறார்கள்.

'Under Rule 184 of the Tamil Nadu Legislative Assembly Rules, I give a matter of privilege against the Vice-Chancellor, Tamil Nadu Agricultural University, Coimbatore to convene the Board of management meeting (of which I am a member, elected by the Assembly) on 27th March 1974 even though I had made a telegraphic request for a postponement of the meeting, on the plea I have to attend the Assembly on 27th March 1974. Sir, the decision of the Vice-Chancellor prevents me from discharging my duties as a member of this august House and hence

his action constitutes a gross breach of the privilege of this House" என்று சொல்லியிருக்கிறார்கள். அது எப்படி உரிமைப் பிரச்னையாகும் என்பதை சுருக்கமாக கூறுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

* **திரு. கோவை செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் என்பது மற்ற பல்கலைக் கழகங்களைப் போன்றது அல்ல. அது அரசினுடைய நேரடியான கட்டுப்பாட்டின் கீழே இயங்குவது போன்று தான் அமைந்திருக்கிறது. அது ஒரு அடானமஸ் பாடி என்று சொன்னாலும் கூட, அதை நிர்வகிக்கின்றவர்கள் அரசாங்கத்தில் இருக்கிற செயலாளர்கள், பினன்ஸ் செகரடரி, அக்ரிகல்சர் செகரடரி என்று இப்படி அரசினருடைய செயலாளர்கள் பலர் தான் அவர்களுடைய பதவியின் காரணமாக அங்கே பிரதிநிதித்துவம் வகிக்கின்றார்கள்.

அது போக, இந்த மன்றத்தின் சார்பிலே நான் ஏகமனதாக இந்த மன்றத்தினால் தேர்ந்தெடுக்கப்பட்டு இந்தப் பல்கலைக் கழகத்தில் அங்கம் வகிக்கின்றேன். ஆக, வெளியிலே இருப்பவர்கள் யாரும் அங்கே இல்லை. இரண்டு உறுப்பினர்களை அரசாங்கம் தான் நாமினேட் செய்கிறது. ஆக, தமிழ் நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் என்பது அரசாங்க அதிகாரிகளும், அரசாங்கத்தோடு தொடர்பு கொண்ட பிரதிநிதிகளும் மட்டுமே இருக்கக் கூடிய ஒரு அமைப்பாகும்.

அந்த அமைப்பிலே இந்த மன்றத்தினுடைய பிரதிநிதியாக நான் அங்கே இருக்கிறேன். இதுவரையிலும் சட்டமன்றம் நடக்கின்ற நாட்களில் பல்கலைக் கழகத்தின் போர்ட் ஆப் மானேஜ்மெண்ட் கூட்டம் நடைபெறுவதில்லை. அப்படி நடைபெற்றாலும் நாங்கள் செய்தியை எழுதி அனுப்பினால் உடனே அதை விடுமுறை நாட்களில் வைத்துக்கொள்வார்கள். பட்ஜெட் சம்பந்தமாக முடிவு எடுக்கவேண்டுமென்றாலும் கூட, ஞாயிற்றுக் கிழமைகளில் சாதாரணமாக வைப்பது வழக்கம். இந்த முறை வேண்டுமென்றே 27-ம் தேதி வைத்திருக்கிறார்கள். அதற்கான காரணங்கள் மூன்று இருக்கின்றன. பேரவைத் தலைவர் அனுமதியோடு அதைத் தங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

27-ம் தேதி நடைபெற்ற போர்டு மீட்டிங்கில் மூன்று விஷயங்களை வைத்திருந்தார்கள். அந்த விவாதத்தில் நான் கலந்து கொண்டால் துணை வேந்தருடைய எண்ணம் நிறைவேருமல் போய்விடும் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது வேண்டியதில்லை. மோட்டிவ் கற்பிக்கவேண்டாம். அதெல்லாம் இங்கே வேண்டியதில்லை. சுருக்கமாகச் சொல்லுங்கள்.

திரு. கோவை செழியன் : சாதாரணமாக சட்டசபை நடக்கின்றபொழுது டெவலப்மெண்ட் கவுன்சில் கூட்டங்கள் நடைபெறுவதில்லை. அதைப்போல் பஞ்சாயத்துக் கூட்டங்களும் நடைபெறுவதில்லை என்பது சம்பிரதாயமாக இருக்கிறது. இந்தச் சட்டமன்றக் கூட்டத்தில் நான் கலந்துகொள்வது என்னுடைய உரிமையாகும். வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் போர்டு மெம்பர் என்றால், இந்த அவையினுடைய பிரதிநிதியாகத் தான் நான் அங்கே கலந்துகொள்கிறேன். வேண்டுமென்றே இந்த அவை நடைபெறும் நாட்களில் அந்தப் பல்கலைக் கழக போர்டு மீடிங் நடத்தப்படுவதால் என்னுடைய உரிமை அங்கே பாதிக்கப் பட்டிருக்கிறது. இந்தச் சபையினுடைய பிரதிநிதி என்று நான் சொல்கிறபொழுது தமிழகத்தினுடைய பிரதிநிதியாக நான் அங்கே இருக்கிறேன். ஆக, இந்த அவையை புறக்கணிக்கின்ற வகையிலே வேண்டுமென்றே என்னுடைய வேண்டுகோளை நிராகரித்து—செயலாளர்களும் அதே மாதிரி சொல்லியிருக்கிறார்கள்—இந்த அவையினுடைய பிரதிநிதி இப்படிக் கூறியும், வேண்டுமென்றே என்னுடைய உரிமையை மீறுகிற வகையில் இந்தக் கூட்டத்தை அசெம்ப்ளி நடக்கின்ற நாட்களில் வைத்தது என்னுடைய உரிமையைக் கட்டுப்படுத்துவதாகும் என்பதை தங்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கோவை செழியன் அவர்கள் எழுப்பி உள்ளது ஒரு முக்கியமான பிரச்னை ஆகும்.

[பேரவைத் தலைவர்] [1974 ஏப்ரல் 2

அவர் இப்பேரவையால் தேர்ந்தெடுக்கப் பட்டுத் தமிழ் நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக ஆட்சிக் குழுவின் உறுப்பினராக இருக்கிறார். அக் குழுவின் கூட்டத்தைப் பல்கலைக் கழகத் துணை வேந்தர் அவர்கள் 27—3—1974 அன்று கூட்டியிருக்கிறார்.

சட்டப் பேரவைக் கூட்டம் நடந்துகொண்டு இருக்கும் சமயம் இக் கூட்டத்தைக் கூட்டுவது, சட்டப் பேரவையில் தான் ஆற்றும் பணியினைத் தடை செய்வதாக இருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் தம் அறிக்கையில் கூறுகிறார். மேலும், இது குறித்துத் தான் பல்கலைக் கழகத்திற்கு 13—3—1974 அன்று ஒரு தந்தி அனுப்பியதாகவும் அப்படியிருந்தும் துணை வேந்தர் அவர்கள் குழுவின் கூட்டத்தைக் கூட்டி இருப்பது தாம் சட்டப் பேரவையின் கூட்டத்தில் கலந்து கொள்வதைத் தடுப்பதாகும் என்பது மாண்புமிகு உறுப்பினரின் வாதம் ஆகும்.

சட்டப் பேரவையின் கூட்டத்தில் கலந்துகொள்ள வரும் ஒரு மாண்புமிகு உறுப்பினரை அவ்வாறு கலந்துகொள்ள முடியாமல் தடை செய்வது உரிமை மீறிய செயலாகும். ஆனால், பல்கலைக் கழக ஆட்சிக் குழுவின் கூட்டத்தைக் கூட்டியிருப்பதாலேயே, மாண்புமிகு உறுப்பினர் இப் பேரவையின் கூட்டத்தில் கலந்து கொள்வதிலிருந்து தடுக்கப் பட்டிருக்கிறாரா என்று பார்த்தால், இல்லை என்று தான் சொல்ல வேண்டும். ஆயினும், இப் பேரவையினால் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர் அக் குழுவின் உறுப் பினராக இருப்பதால், அவர் தம் பணியினை செவ்வனே செய் வதற்கு, பேரவைக் கூட்டம் இல்லாத நாட்களில் பல்கலைக் கழக ஆட்சிக் குழுவின் கூட்டம் நடப்பது தான் பொருத்தமுடைய தாகும்.

எனவே, இதில் அவையுரிமை மீறல் எதுவும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இப் பேரவையின் வாயிலாகப் பல்கலைக் கழகத் துணை வேந்தர்களுக்கு, ஆட்சிக் குழுவின் கூட்டங்களைப் பேரவை கூடாத நாட்களில் வைத்துக்கொண்டால், நலமாக இருக்கும் என்பதை வேண்டுகோளாக விடுக்கிறேன்.